விட்டுவிட்டு, வேறு இடங்களிலே கிணறுகளே வெட்டிவிடுகிருர்கள். அதற்குப் பணம் ஒதுக்குகின்ற வாய்ப்பு இந்த அரிசன நலத் துறையிலே இருக்கிறது. அரசாங்கம் பரிசீலனே செய்துகொண்டிருக் கிறது அவைகளே எடுத்துக் கொள்ளலாமா என்று. அரிசன நலத் துறையே அரிசன காலனிகளில் நேரிடையாகக் கிணறு வெட்ட வாய்ப்பினே ஏற்படுத்துவது நலமாக இருக்கும்.

திரு. ந. தருமலிங்கம் : தலேவரவர்களே, தமிழ்நாட்டில் எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அரிசனக் காலனிக் கிணறுகளே அரசு மேற்கொண்டுள்ளது? இன்னும் மேற்கொள்ளப்பட இருக்கிற ஊராட்சி ஒன்றியங்கள் எத்தனே?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலேவரவர்களே, தமிழ் நாட்டில் இருக்கிற எல்லாக் கிராமங்களுக்கும் கிணறு வெட்ட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனல் இருக்கின்ற நிதி நிலேமையைப் பொறுத்து எல்லாவற்றையும் உடனடியாகச் செய்ய முடியாது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு நலத்துறை மூலமாகக் கிணறு தோண்டுவற்கும், சாலேகள் போடுவதற்கும், மானியங்கள் வழங்கப்படுகின்றன. குறிப்பாக, அரிசன காலனிகள் இருக்கின்ற பகுதிகளில் இப் பணிகளேத் துவக்குவதற்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அரசாங்கம் அளிக்கும் மானியம் போக மீதப் பணத்தை ஆங்காங்கே இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களே ஒதுக்கிக்கொள்ள வேண்டும். அரசாங் கத்தைப் பொறுத்த வரையில் அரிசன காலனிகளுக்கு ரோடுகள் போடுவதிலும், கிணறுகள் வெட்டுவதிலும் தடை ஏதும் இல்லே.

* 153 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether the Government have approved a scheme during 1970–71 to dig 7 new drinking water wells for Harijans in Chennimalai Firka of Erode taluk?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லே.

மாண்புமிகு பேரவைத் துணேத் தலேவர் : கேள்வி எண் 154 மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளிற் கிணங்க தள்ளிப்போடப்பட்டுள்ளது.